Australian Government
Department of Home Affairs

# ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேறுதல்

இந்தப் பக்கத்தில்

குடிமக்கள் அல்லாதவர்கள்

வீட்டிற்குத் திரும்பும் தற்காலிக விசா உள்ளவர்கள்

ஆஸ்திரேலியர்களும் நிரந்தரக் குடிமக்களும்

ஆஸ்திரேலியச் சமூகத்தின் நலத்தைப் பாதுகாக்க, ஆஸ்திரேலியா கடுமையான எல்லை அளவீடுகளைக் கொண்டுள்ளது. மிகவும் குறைந்த அளவு விமானங்களே ஆஸ்திரேலியாவில் தற்போது கிடைக்கப்பெறுகின்றன, இந்தச் சமயத்தில் உங்களால் பயணிக்க முடியாது. பார்க்கவும்: தேசிய அமைச்சரவை ஊடக அறிக்கை.

ஆஸ்திரேலியக் குடிமக்கள் உட்பட, ஆஸ்திரேலியாவிற்கு வருகைதரும் அனைத்துப் பயணிகளும், அவர்கள் வரும் முனையத்தில், ஹோட்டல் போன்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தங்குமிடத்தில் 14 நாட்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். பயணிகளுக்கான கொரோனாவைரஸ் (COVID-19) ஆலோசனையைப் பார்க்கவும். நீங்கள் உங்கள் தனிமைப்படுத்தலுக்கான செலவுகளைச் செலுத்த வேண்டியிருக்கலாம். தனிமைப்படுத்தல் தேவைகள் பற்றிய கூடுதல் தகவலைப் பெற, தொடர்புடைய மாநில அல்லது பிராந்திய அரசு சுகாதாரத் துறையைத் தொடர்புகொள்ளவும்.

## குடிமக்கள் அல்லாதவர்கள்

மாநில, பிராந்திய எல்லைக் கட்டுப்பாடுகள், வணிக அடைப்புகள், தனிமனித விலகல் தேவைகள் போன்றவை உள்ளிட்ட, தற்போதைய COVID-19 சூழல் காரணமாக, ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிநாட்டுப் பயணிகள் முடிந்தவரை வீடு திரும்புமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

COVID-19 கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளபோது, ஆஸ்திரேலியாவிற்குத் திரும்புவதற்குத் தற்காலிக விசா உள்ளவர்கள் விரும்பினால், பொதுவாக அவர்களுக்குப் பயணத்திற்கான விலக்கு தேவைப்படக்கூடும் என்பதை அறிந்திருக்க வேண்டும். ஆணையரின் விலக்களித்தல் பற்றி மேலும் தகவலைப் பெற, ஆஸ்திரேலியாவிற்கு வருகைபுரிதல் என்பதைப் பார்க்கவும்.

## வீட்டிற்குத் திரும்பும் தற்காலிக விசா உள்ளவர்கள்

COVID-19 ஆல் பாதிக்கப்பட்ட தற்காலிக விசா உள்ளவர்கள் தங்கள் வீடு திரும்ப அவர்களுடைய நாட்டின் எல்லைக் கட்டுப்பாடுகள் அனுமதிக்கிறது எனில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற, தற்காலிக விசா உள்ளவர்களுக்கு விலக்கு தேவையில்லை. அவர்களுடைய சொந்த நாட்டு எல்லைக் கட்டுப்பாடுகள் அனுமதிக்கிறது எனில் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் செல்லலாம்.

COVID-19 சூழல் தொடர்ந்து மாறுகிறது என்பதை நினைவில் கொள்ளவும்.

ஒவ்வொரு வாரமும் சரிபார்க்கவும்:

- எல்லைக் கட்டுப்பாடுகள்
- விமானங்கள் கிடைக்கப்பெறுதல்.

வணிக விமானங்கள் ஆஸ்திரேலியா முழுவதிலும் பல்வேறு பெரிய விமானநிலையங்களில் கிடைக்கின்றன. இந்த விமான நிறுவனங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேறுவதற்கு, தற்போது விமானங்களை இயக்குகின்றன:

இந்த விமான நிறுவனங்கள் சேவைபுரிகின்றன: ஏர்ஆசியா | ஏர் நியூசிலாந்து | சீனா ஏர்லைன்ஸ் | சீனா சதர்ன் ஏர்லைன்ஸ் | எமிரேட்ஸ் | மலேசியா ஏர்லைன்ஸ் | ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் | கத்தார் ஏர்வேஸ் | யுனைட்டெட்

நீங்கள் உங்கள் சொந்த நாட்டிற்குச் செல்லும் ஏதேனும் தனியார் அல்லது அரசு திருப்பியனுப்பும் விமானங்கள் உள்ளதா எனத் தெரிந்துகொள்ள விரும்பலாம்.

தற்போது இந்தியா திருப்பியனுப்பும் விமானங்களை ஏற்பாடுசெய்துகொண்டிருக்கிறது.

நீங்கள் சொந்த நாடு திரும்புவதற்கு ஏதேனும் கூடுதல் உதவி தேவைப்படுகிறது எனில், ஆஸ்திரேலியாவில் உங்கள் தூதரகம் அல்லது இணைத் தூதரகத்தைத் தொடர்புகொள்ளவும்.

நீங்கள் உங்கள் விவரங்களையும் பதிவுசெய்யலாம்.

நாங்கள் உங்கள் தகவல்களை வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறைக்கு வழங்குவோம், இது இந்தத் தகவலை உங்கள் சொந்த நாட்டின் அரசாங்கத்திற்கு வழங்கக்கூடும் (வெளிநாடுகளில் அல்லது தூதரகம், இணைத் தூதரகம் அல்லது ஆஸ்திரேலியாவில் உள்ள உயர் ஆணையத்தின் பிரதிநிதித்துவம் உள்ளது).

இந்தச் சேவை தற்காலிக விசா உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.

## ஆஸ்திரேலியர்களும் நிரந்தரக் குடிமக்களும்

நீங்கள் ஆஸ்திரேலியராகவோ அல்லது நிரந்தரக் குடிமக்களாகவோ இருந்தால், COVID-19 கட்டுப்பாடுகளின் காரணமாக, உங்களுக்கு விலக்கு இருந்தால் தவிர, ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற முடியாது. நீங்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் ஆனால் நீங்கள் கண்டிப்பாக இவற்றில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்:

- உதவி வழங்குதல் உட்பட, COVID-19 பெருந்தொற்றிற்கு எதிராக உங்கள் பயணம் உள்ளது
- (ஏற்றுமதி, இறக்குமதித் தொழிற்சாலைகள் உட்பட) உங்கள் பயணம் மிகவும் முக்கியமான தொழிற்சாலைகள் மற்றும் வணிகத்திற்கு அத்தியாவசியமாக உள்ளது
- நீங்கள் ஆஸ்திரேலியாவில் கிடைக்காத அவசர மருத்துவச் சிகிச்சையைப் பெறுவதற்காகப் பயணிக்கிறீர்கள்
- நீங்கள் தவிர்க்க முடியாத தனிநபர் வணிகத்திற்காகப் பயணிக்கிறீர்கள்
- நீங்கள் இரக்கம் நிறைந்த அல்லது மனிதநேயக் காரணங்களுக்காகப் பயணிக்கிறீர்கள்
- உங்கள் பயணம் நாட்டின் நன்மைக்கானது.

நீங்கள் உங்கள் கோரிக்கைகளுக்கான ஆதரவுச் சான்றுகளை வழங்க வேண்டும், அவற்றில் இவை உள்ளடன்கலாம்:

- கடவுச்சீட்டு/கள்
- திருமணச் சான்றிதழ்/கள்
- பிறப்புச் சான்றிதழ்/கள்
- இறப்புச் சான்றிதழ்/கள்
- உறவுமுறை ஆதாரம் (எடுத்துக்காட்டாக, பகிர்ந்த குத்தகை ஒப்பந்தம், கூட்டு வங்கிக் கணக்கு போன்றவை)
- நீங்கள் நீண்டகால அடிப்படையில் மற்றொரு நாட்டிற்கு இடம்பெயர்வதற்கான ஆதாரம், அதாவது குத்தகைகள், வேலைவாய்ப்புகள், உங்கள் பொருட்கள் போக்குவரத்தில் இருப்பதற்கான ஆதாரம் போன்றவை
- ஆஸ்திரேலியா மற்றும்/அல்லது வெளிநாடுகளுக்கான உங்கள் தற்போதைய செல்லுபடியாகும் விசாவின் ஆதாரம்
- பயணம் ஏன் அவசியம் என்ற அறிக்கைகளுடன் ஏதேனும் மருத்துவச் சிகிச்சை/நிலைமை பற்றிய மருத்துவர் அல்லது மருத்துவமனையின் கடிதம்
- பயணம் ஏன் அவசியம் அல்லது நீங்கள் ஏற்றுக்கொண்ட பணி மிகவும் முக்கியமானது என்பதைக் காட்டும் ஒரு நிறுவனத்திடமிருந்து கடிதம்
- ஆஸ்திரேலியாவிற்கு நீங்கள் எப்போது திரும்புவதற்கு விரும்புகிறீர்கள் என்பதைக் காட்டும் அறிக்கை அல்லது ஆதாரம்
- உங்கள் கோரிக்கைகளை ஆதரிக்கக்கூடிய வேறு ஏதேனும் ஆதாரம்.

**பயண விலக்கைக் கோரும் அனைத்து உதவி ஆவணங்களும் ஆங்கிலத்தில் அலுவலக ரீதியாக மொழிபெயர்க்கப் பட்டிருக்க வேண்டும்.**

**நீங்கள் குறைந்தபட்சம் 4 வாரங்களுக்கு விலக்குக் கோரி விண்ணப்பிக்க வேண்டும், ஆனால் நீங்கள் திட்டமிட்ட பயணத்திற்கு முன்பு 3 மாதங்களுக்குள் இருக்க வேண்டும்.**

**உங்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லையெனில், நீங்கள் உங்கள் பயணத் திட்டங்களைத் தொடரக்கூடாது. உங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டால், விமான நிலையத்தில் விலக்கு முடிவிற்கான சான்றை எடுத்துச்செல்ல வேண்டும்.**

இவ்வாறு இருந்தால் நீங்கள் விலக்கு அளிக்கப்படுகிறீர்கள்:

- ஆஸ்திரேலியாவைத் தவிர வேறு நாட்டின் சாதாரணக் குடிமகன்
- ஒரு விமான நிறுவனம், கப்பற்படைக் குழு அல்லது தொடர்புடைய பாதுகாப்பு ஊழியர்
- சிறப்புப் பிரிவு (துணைவகுப்பு 444) விசா உள்ள நியூசிலாந்துக் குடிமகன்
- வெளிநாடு செல்லும் சரக்குகளின் அன்றாடச் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளீர்கள்
- ஆஸ்திரேலிய அத்தியாவசிய வசதிகளில் முக்கியமான வேலைகளுடன் தொடர்புடையவர்
- ஆஸ்திரேலிய இராணுவத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட, அரசாங்கம் தொடர்பாகப் பயணிக்கிறீர்கள்.

கடந்த 12 அல்லது 24 மாதங்களில், நீங்கள் ஆஸ்திரேலியாவை விடவும் வெளியில் அதிகக் காலம் இருந்திருக்கிறீர்கள் என உங்கள் சர்வதேசப் போக்குவரத்துப் பதிவுகள் காட்டுகிறது எனில், நீங்கள் ஆஸ்திரேலியாவைத் தவிர மற்றொரு நாட்டின் சாதாரணக் குடிமக்களாகக் கருதப்படுகிறீர்கள். நீங்கள் உங்கள் பயணம் தொடர்பான காகித ஆவணங்களை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. தேவைப்படுகிறது எனில், ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் விமான நிலையங்களில் துறைசார்ந்த முறைமைகள் மூலம் உங்கள் போக்குவரத்துப் பதிவுகளைச் சரிபார்க்கலாம்.

கடந்த 12 அல்லது 24 மாதங்களில், நீங்கள் வெளிநாடுகளை விடவும் ஆஸ்திரேலியாவில் அதிகக் காலம் இருந்திருந்தாலும், மற்றொரு நாட்டின் சாதாரணக் குடிமக்களாக நீங்கள் கருதப்பட வேண்டுமெனில், நீங்கள் பயண விலக்கிற்காக ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்கலாம்.

உங்கள் கோரிக்கையில் ஆதாரம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும், எடுத்துக்காட்டாக:

- உங்களுக்கு மற்றொரு நாட்டில் நிறுவப்பட்ட, நிரந்தரமான வீடு உள்ளதைக் காட்டும் ஆவணங்கள்
- உங்கள் நெருக்கமான குடும்ப உறுப்பினர்களின் இடம்
- ஆஸ்திரேலியாவுக்கு வெளியே பணிபுரிவதற்கான ஒரு வேலைவாய்ப்பு ஒப்பந்தம்
- சார்ந்துள்ள குழந்தைகளின் பள்ளிக்கூடப் பதிவு
- தற்போது நடைபெறும் வணிகம்/சொத்து ஆர்வங்களின் ஆதாரம்
- நீங்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றவர் அல்லது மற்றொரு நாட்டிற்கான செல்லுபடியாகும் விசா உள்ளவர் என்பதற்கான ஆதாரம்
- மற்றொரு நாட்டில் நீங்கள் இல்லாமல் இருப்பது தற்காலிகமானது, அங்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்பதைக் காட்டும் ஆதாரம்.

நீங்கள் உங்களுக்குப் பயண விலக்குத் தேவையில்லையெனில் நினைத்தால், நீங்கள் விமானநிலையத்தில் நுழையும்போது, இந்த ஆதாரத்தைக் காட்டலாம். இருப்பினும், உங்கள் சூழல்கள் சாதாரணக் குடிமகன் என்பதற்கான வரையறையில் இருக்காது என உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், நாங்கள் உங்கள் திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் குறித்து குறைந்தபட்சம் நான்கு வாரங்களுக்கு முன்பாக மதிப்பீட்டிற்காக ஒரு கோரிக்கையை வைப்பதற்குப் பரிந்துரைக்கிறோம்.